### நெல் கொள்முதல் செய்யும்போது

# நெல்லின் ஈரப்பதம் 22 சதவிகிதமாக ஒன்றிய அரசு உயர்த்துமா?

## மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி!



புதுடெல்லி,மார்ச்.29-

பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது டாக்டர்.கலாநிதி வீராசாமி அவர்கள் ஒன்றிய அரசு நெல் கொள்முதல் செய்யும் போது தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 17 சதவிகித ஈரப்பதத்தை 22 சதவிதமாக உயர்த்த ஒன்றிய அரசு முன்வருமா என்று கேள்வி எழுப்பினார்.

அவர்மேலும்பேசியதாவது:

இந்தியாவில் 80 சதவிகித விவசாயிகள் ஒரு ஹெக்டேர் நிலத்துக்கும் குறைவாகப் பெற்றுள்ள சிறு விவசாயிகளாக உள்ளனர், பருவ காலங்களில் பெய்யும் மழையைச் சார்ந்த அவர்களது வாழ்க்கை அமைந்துள்ளது. இயற்கை இடர்பாடுகளில் இருந்து தங்கள் பயிரைக் காக்க, கடவுளை வேண்டிக் கொள்கின்றனர். விவசாயிகளின் நிலைமையை யாரும் அறிந்து கொள்வதில்லை, நாட்டில் விவசாயிகள் பெரும் எண்ணிக்கையில் தற்கொலை செய்து கொள்கிறார்கள், அவர்களிடம் நான் நெருங்கிப் பழகி, அவர்கள் நிலையை அறிந்து கொள்ள முற்பட்டபோது, எனக்கு அதிர்ச்சியான தகவல் கிடைத்தது. வானம் பொய்த்து, மழை இல்லாத காலங்களில் விவசாயம் பாதிக்கப்படும்போது, விவசாயிகள் வசிக்கும் ஊர்களில், திருமணம் அல்லது விழாக்கள் நடைபெறும் போது, அத்திருமணங்களில் கலந்து கொண்டு 'மொய் 'வழங்க வேண்டும் என்கின்ற நிலை ஏற்படும் போது, மொய் பணம் திரட்ட முடியாத சில விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். தமிழகத்தில் மொய் என்று சொல்லப்படுவது, வட இந்தியாவில் பிந்தி என்று சொல்கிறார்கள் ஆக, நாடு முழுவதும், இந்த நிலை பரவலாகக் காணப்படுகிறது. இது போன்ற விவசாயிகளின் துயர் துடைக்க , எங்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அரசு நெல் கொள்முதல் செய்யும்போது, அதன் ஈரப்பத அளவை 17 சதவிகிதத்தில் இருந்து 22 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்று ஒன்றிய அரசைக் கேட்டுக்கொண்டார்.

முதலில் இதற்கு ஒப்புதல் தருவதாக சொன்ன ஒன்றிய அரசு பின்னர் தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டு ஈரப்பத அளவை 22 சதவிகிதமாக உயர்த்துவதற்கு மறந்து விட்டது. நாங்கள் தங்களிடமிருந்து தமிழ்நாட்டுக்காக எந்த கொடையையும் கேட்கவில்லை இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகளின் நலத்துக்காக , நெல்லின் ஈரப்பத அளவை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறோம். எங்கள் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அவரது ஆட்சிக் காலத்தில் ரூ. 4000 கோடி அளவில் விவசாயிகளின் கடனை ரத்து செய்தார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தனது பதிலுரையில், ஒன்றிய அரசு கடந்த 202324 பட்ஜெட்டில், விவசாய த்திற்காக ரூ.13,625 கோடி ஒதுக்கப்பட்டதாகவும், பின்னர் திருத்திய மதிப்பீட்டில் அது ரூ.15,000 கோடியாக உயர்த்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், உண்மையில் அந்த ஆண்டு, ரூ. 12,948.5 கோடி தான் செலவிடப்பட்டதாக ஒன்றிய அரசின் நிதித்துறை தெரிவித்துள்ளது. இது, அரசு ஒதுக்கீடு செய்திருந்த தொகையை விட குறைவானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

அடுத்ததாக, விவசாயிகளுக்குப் பயிர் காப்பீடு (இன்ஸ்யூரன்ஸ்) வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று அமைச்சர் அவர்கள் கூறினார். ஆனால், நிதி அறிக்கையில், அரசு இன்ஸ்யூரன்ஸிற்காக ஒதுக்கியுள்ள நிதி முழுமையாக செலவிடப்படவில்லை. ஏனெனில் நீங்கள் விவசாயிகளின் மனுக்களை, ஒரு இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி ஆய்வு செய்வது போல ஆய்ந்து, விவசாயிகளின் மனுக்களில் உள்ள குறைபாடுகளைக் கணக்கிட்டு, இன்ஸ்யூரன்ஸ் தொகையை குறைப்பது அல்லது கொடுக்க மறுப்பதால், அந்த நிதி முழுமையாக விவசாயி களைச் சென்று சேர்வதில்லை. இப்படி, செய்தீர்களானால் விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கையை குறைக்க முடியுமா என்பதை எண்ணிப் பாருங்கள். விவசாயிகள் இன்ஸ்யூரன்ஸ் கோரிக்கை 21 நாட்களில் முடித்து வைக்கப்படுகிறது என்று அமைச்சர் கூறுகின்றனர். ஆனால், நிதியாண்டு முடிந்த பின்பும், பலரது கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன என்று அரசு கூறும் தகவல்களில் இருந்து தெரிகின்றது.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி உரையாற்றினார்.

---

### சட்டமன்றத் தேர்தல் 2026:

## ஏப்ரல் 23-ஆம் தேதி பொதுவிடுமுறை அறிவிப்பு!

சென்னை,மார்ச்.29-

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் வாக்குப் பதிவை முன்னிட்டு ஏப்ரல் 23ம் தேதி பொதுவிடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 23ம் தேதியை பொது விடுமுறையாக அறிவித்து அரசாணை வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு; தமிழ்நாட்டில் ஏப்ரல் 23ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர்

# இராம.இளங்கோவன் தாயார் ஜெயலெட்சுமி அம்மையார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



மயிலாடுதுறை, மார்ச். 29-

மயிலாடுதுறை மாவட்டச் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன் தாயார் ஜெயலெட்சுமி அம்மையார் (97) நேற்று (28.3.2026) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த ஜெயலெட்சுமி அம்மையாருக்கு மகன்கள் இராம.இளங்கோவன், இராம.வைத்தியநாதன், இராம. முத்துக்குமரன் ஆகியோர் உள்ளனர்.

வைத்தீஸ்வரன்கோவில் அருகே உள்ள பெருமங்கலத்தில் இராம. இளங்கோவன் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள ஜெயலெட்சுமி அம்மையார் உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். ஜெயலெட்சுமிஅம்மையாரின் இறுதி ஊர்வலம் இன்று (29.3.2026) காலை 11.00மணிக்கு நடைபெறுகிறது.

---

### சென்னையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து

# நாட்டுப்புறக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு!



சென்னை,மார்ச்.29-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் - 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, நேற்று முன்தினம் (27.03.2026) பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எம்.ஆர்.நகர், மார்க்கெட் பகுதி, தண்டையார்பேட்டை பிரதான சாலையில் நாட்டுப்புற கலைஞர்கள் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு கரகாட்டம், கானா பாடல்கள், கும்மிபாட்டு போன்ற கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர். பின்னர், அப்பகுதியில் அமைக்கப்ப ட்டுள்ள கையெழுத்து இயக்கப் பலகையில் வாக்காளர்கள் கையொப்பமிட்டனர்.

இதேப் போன்று, ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொருக்குப்பேட்டை, சுண்ணாம்பு கால்வாய் விளையாட்டுத் திடல் பகுதியில் நாட்டுப்புற கலைஞர்கள் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து தப்பாட்டம், கரகாட்டம், வாக்காளிப்பது தொடர்பான விழிப்புணர்வுப் பாடல்களைப் பாடி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

---

### பா.ஜ.க. ஆளும் கோவாவில் அரங்கேறிய கொடூரம்!

# 30 சிறுமிகளைச் சீரழித்த பா.ஜ.க. கவுன்சிலர் மகன் கைது!

கோவா, மார்ச் 29 -

பா.ஜ.க. ஆளும் கோவா மாநிலத்தில் 30 சிறுமிகளை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி, மிரட்டிப் பணம் பறித்த வழக்கில் கோவா பா.ஜ.க. கவுன்சிலரின் மகன் கைது செய்யப்பட்டார்.

கோவா மாநில பா.ஜ.க. கவுன்சிலராக இருப்பவர் சுஷாந்த் நாயக். இவரது 22 வயது மகன் சோஹம் நாயக் கடந்த மூன்று ஆண்டுகளாக 30 சிறுமிகளை பாலியல்ரீதியாக துன்புறுத்தி வந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமிகளின் அந்தரங்க காட்சிகளை வீடியோவாக பதிவு செய்து தொடர்ந்து மிரட்டி பணமும் பறித்து வந்துள்ளார். மேலும் தனது நண்பர்களுடன் மது அருந்திய போது இந்த வீடியோக்களை காட்டியதாக கூறப்படு கிறது. இந்த சம்பவம் வெளியே தெரிய வந்ததும் கோவா முழுவதும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதையடுத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து சோஹம் நாயக்கை கைது செய்தனர். பாதிக்கப்பட்ட சிறுமிகள் அனைவரையும் அடையாளம் காணவும், அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யவும், விசாரணையின்போது கைப்பற்றப்பட்ட டிஜிட்டல் ஆதாரங்களை ஆய்வு செய்யவும் நடவடிக்கை எடுத்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கோவா 30 சிறுமிகளை சீரழித்த பா.ஜ.க. கவுன்சிலர் மகன் கோவா மாநில பா.ஜ.க. கவுன்சிலராக இருப்பவர் சுஷாந்த் நாயக் பா.ஜ.க. கவுன்சிலரின் 22 வயது மகன் சோஹம் நாயக், கடந்த மூன்று ஆண்டுகளாக 30 சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்துள்ளார் பாதிக்கப்பட்ட சிறுமிகளின் அந்தரங்க காட்சிகளை வீடியோவாக பதிவு செய்து தொடர்ந்து மிரட்டி பணமும் பறித்து வந்துள்ளார்.

மேலும் தனது நண்பர்களுடன் மது அருந்திய போது இந்த வீடி யோக்களை காட்டியதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் வெளியே தெரிய வந்ததும் கோவா முழுவதும் பெரும் கொந்தளிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து பா.ஜ.க. கவுன்சிலரின் மகன் சோஹம் நாயக்கை கைது செய்தனர்.

---

### பறிமுதல் செய்த போதைப்பொருள் மாயமான விவகாரம்:

# 2,300 கிலோ போதைப்பொருளை எலிகள் சாப்பிட்டதாம்!

## குஜராத் போலீசார் விளக்கம்! சி.ஏ.ஜி. அறிக்கையில் அதிர்ச்சித் தகவல்!

அகமதாபாத், மார்ச் 29 -

குஜராத்தில், பறிமுதல் செய்யப்பட்ட 2 ஆயிரத்து 300 கிலோ போதைப்பொருளை எலிகள் சாப்பிட்டதாக காவல்துறை விளக்கமளித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சமீபகாலமாக நாட்டிலேயே போதைப்பொருளின் கடத்தல் மையமாக குஜராத் மாநிலம் உருவெடுத்துள்ளதாக பல்வேறு தரப்பினரிடம் இருந்து புகார்கள் எழுந்துள்ளன. வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்படும் போதைப் பொருள், குஜராத்தில் உள்ள துறைமுகம் வழியாக மற்ற மாநிலங்களுக்கு கடத்தப்படுவதாகவும் குற்றச்சாட்டு நிலவு கிறது.

இந்த சூழலில், இந்திய தணிக்கை மற்றும் கணக்காய்வுத் தலைவர் வெளியிட்ட சமீபத்திய அறிக்கையில், குஜராத்தில், கடந்த 2010 முதல் 2022 கால கட்டத்தில், அம்மாநில போலீசார் 6 ஆயிரத்து 510 கிலோ போதைப் பொருளை பறிமுதல் செய்ததாகவும், அதில் 4 ஆயிரத்து 177 கிலோ போதைப் பொருளை அழித்ததாகவும் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில், மீதமுள்ள 2 ஆயிரத்து 332 கிலோ மாயமானதாக எழுந்த புகாரை அடுத்து, போதைப்பொருள் திருடுபோனதாகவும், எலிகள் அவற்றை சாப்பிட்டு விட்டதாகவும் குஜராத் காவல் துறை விளக்க மளித்ததாக அறிக்கையில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆ.த. சதாசிவம்

**மார்ச் 29 (2017)**



ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் டாக்டர் அண்ணா மன்றத்தை துவக்கி, கழகப் பணியாற்ற தொடங்கிய இவர், நெருக்கடிகாலத்தில் 76வது வட்டப் பொறுப்பாளராகவும், பின்னர் ஆயிரம் விளக்கு பகுதி பிரதிநிதி, பகுதி பொருளாளர், மாவட்ட பிரதிநிதி என கழக அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தலைமை நிலைய அலுவலகச் செயலாளராக நியமிக்கப்பட்டு பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

'இந்து' நாளிதழில் பணியாற்றியதோடு, இந்து தொழிற் சங்கத்தில் பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.

சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும், தமிழ்நாடு மின்சார வாரிய ஆலோசனை குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

"இவரையும் அண்ணா அறிவாலயத்தையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு – இணை பிரியாத அளவுக்கு தலைமைக் கழகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# மாதவரம் வடக்குப் பகுதி 23 'அ' வட்டத்தில் தேர்தல் பணி!

சென்னை,மார்ச்.29-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டம் காவாங்கரை கே எஸ் நகர் பகுதிகளில் சட்டமன்றத் தேர்தலில் ஆற்ற வேண்டிய கழகத்திற்கான தேர்தல் பணிகள் சுறுசுறுப்பாக நடந்து வருகிறது.

மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பாகம் வாரியாக வாக்காளர் சரிபார்த்தல் பணி, குடும்பங்கள் சரி பார்க்கும் பணிகள், தொடர்ந்து வீடு வீடாக நடைபெற்று வருகின்றன.

பாகம் எண்கள் 260 முதல் 267 வரை உள்ள அனைத்திலும் நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தேர்தல் பணியாற்றி வருகிறார்கள்.இந்த பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்ட செயலாளர் வி. ஆர் .குப்பன் ஆகியோர் வீடு வீடாக சென்று வாக்காளர் சரி பார்த்தல், விடுபட்ட வர்கள், இறந்தவர்கள் மற்றும் குடும்ப அட்டைகள் போன்ற விவரங்கள் சேகரிக்கும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு துரிதப்படுத்தினார்கள்.

இதே போல 23அ வட்டத்திற்குட்பட்ட அனைத்து பாகங்களிலும் வீடு வீடாக தேர்தல் பணி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் சுறுசுறுப்படைந்துள்ளது. செல்கின்ற இடங்கள் எல்லாம் பொதுமக்கள் தங்களுக்கு எண்ணிலடங்காத சலுகைகளை சாதனைகளாக வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும் உதயசூரியன்சின்னத்திற்கும் வாக்களிப்போம் என்று உறுதி அளித்தனர். இப்பணிகளில் வட்ட நிர்வாகிகள் அ.ராமச்சந்திரன், எம். உசேன் மைதீன், பி. சுதாகர், அம்மு மூர்த்தி, அறிவழகன், டி. பார்பன், டி. முத்துகிருஷ்ணன், வி.ஹரி, அ அப்துல்சமது, பார்த்திபன், மகளிர் அணி நிர்வாகிகள் எம்.அமுதா, எஸ். கலைச்செல்வி, ஆர். சுதா, ஆர். ஜெயபாரதி, வைலட் ராணி, லாரன்ஸ்,பகுதி இளைஞர் அணி சாந்தகுமார், சித்ரா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு பணிகளை தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## து. ராமதாஸ்

**மார்ச் 29 (2021)**



தனது இளமை பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

சென்னை மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் பகுதியில் வட்டச் செயலாளராகவும் – மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்..

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**